செய்தி வெளியீடு எண்:128 நாள்:21.05.2021

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் தமிழகத்தின் நுண்நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடல் நடத்தினார்

..........

கோவிட்–19 பரவல் காரணமாக கிராமப்புற மக்களின் குறிப்பாக கிராமப்புற பெண்களின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, அதனை உடனடியாக சீர்செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கிராமப் பகுதிகளில் அவசர தேவைகளுக்கு சிறு கடன்கள் வழங்கி, கிராமப்புற பெண்களின் உடனடி தேவைகளை நிறைவேற்றுவதில் உதவி செய்து கொண்டிருக்கும் நுண்நிதி நிறுவனங்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாக நுண்நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் 21.05.2021 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் காணொலி வாயிலாக கலந்துரையாடினார்கள்.

இக்கலந்துரையாடலில் ஊரக கடன்களில் நுண்நிதி நிறுவனங்களின் பங்கு, தமிழகத்தில் இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டி நெறிகளில் நுண்கடன் நிறுவனங்களின் நிலைப்பாடு, ஊரக கடன்கள் மற்றும் கடன் சுமை குறைப்பில் நுண்நிதி நிறுவனங்களின் வெற்றிக் கதைகள், கோவிட் நோய்த்தொற்றில் கடன்தாரர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம், நுண்நிதி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடையும் வகையிலும், கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகளில் இருந்து அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும்

வகையிலும் நுண்நிதி நிறுவனங்கள் அவர்களுக்கு தாராளமாக கடன்களை வழங்க வேண்டும் என்றும், மேலும் அவர்களது தற்போதைய கடின நிலையைக் கருத்தில் கொண்டு கடன்களைத் திரும்ப வசூலிக்கும் முறைகளில் மென்மையான அணுகுமுறையைக் கடைபிடிக்குமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நுண்கடன் அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலாளர் திருமதி. பிங்கி ஜோயல், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு. அமர் குஷ்வா, இ.ஆ.ப., திரு. சுரேஷ்குமார் (பொது மேலாளர், RBI), திரு. பிரகாஷ் (உதவி பொது மேலாளர், மாநில வங்கியாளர் கூட்டமைப்பு), முனைவர் சைபல் பால் (சா–தன் அமைப்பு), செல்வி. அச்லா சவ்யசாசி (தலைவர், MFIN அமைப்பு), திரு. P.M. கமலேஷ் (தென் இந்திய வட்டார மேலாளர், MFIN), திரு. கார்த்திக் ராமதாஸ் (தென் இந்திய வட்டார மேலாளர், சா–தன் அமைப்பு), முனைவர் N. ஜெயசீலன் (முதன்மை செயல் அலுவலர், விருட்ஷம் அகாடமி) மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**